# சுதந்திரன்

SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2008
புரட்டாதி 5
ஷவ்வா பிறை 7
புதன் (21-9-77)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 30

விலே சதம் 35


# தமிழ் ஈழப் பிரச்சினையை ஐ. நா. பொதுச்சபையில் எழுப்ப முயற்சி!

ஆகஸ்ட் மாதத்தில் இலங்கையில் நடைபெற்ற தமிழினப் படுகொலேயும், தமிழ் ஈழத்தில் நடைபெற்று வரும் சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளும் தமிழ் அகதிகள் பிரச்சினையும் இப்போது உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ள தால், இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஈழத்தமிழர் பிரச்சினையையும், தமிழ்ஈழ மக்களின் தேசிய விடுதலேக் கோரிக்கையையும் அடுத்தமாதம் கூடும் ஐக்கியநாடு கள் சபையின் பொதுச்சபைக் கூட்டத்தில் எழுப்பச் செய்யும் முயற்சியில் வெளி நாடுகளில் இயங்கும் ஈழத்தமிழர் விடுதலே இயக்கங்கள் தற்போது ஈடுபட்டுள்ளன. அமெரிக்காவில் இயங்கும் '' ஈழத்தமிழர் இயக்கம்'' இது சம்பந்தமாக ஏற்கனவே அமெரிக்க அரசாங்கத் திணைக்களத்துடனும், அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகளு டனும் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதுடன் செனட்டர் கென்னடியையும் விரைவில் சந்தித்து ஈழத்தமிழர் பிரச்சினையை எடுத்துவிளக்கவுள்ளது.

ஈழத்தமிழ் மக்களுக்கு எதிராக இங்கு நடைபெற்றுவரும் இனவெறிக் கொடுமைகளும் ஈழத்தமிழ் மக்களின் தனிநாடு கோரிக்கையும் உலக நாடுகளின் கவனத்தை இப்போது ஈர்த்து வருகிறது. அதுவும் 1977 - ஆகஸ்ட் இனக் கலவரத்தின் பின்னர் இந்தப் பிரச்சினே உலகின் கவனத்தை மேலும் ஈர்த்துள்ளது குறிப் பிடத்தக்கது.

ஈழத்தில் நடைபெற்றுவரும் சிங்கள இனவெறிக்கொடுமை பற்றியும், தமிழ்ஈழக் கோரிக் கைபற்றியும் உலகின் முன் னணி ஆங்கில ஏடுகள் முக்கி யத்துவம் கொடுத்து செய்தி கள், படங்கள், விமர்சனங்கள் ஆகியவற்றை வெளியிட்டுள் ளன. அமெரிக்க 'நியூஸ் வீக்', நியூயோர்க் டைம்ஸ், பொஸ்டன் குளோப் (Boston Globe) கிறிஸ்டியன்ஸ் சயன்ஸ் மொனிட்டர், லண்டன் ரைம்ஸ், கார்டியன் போன்ற பிரபல செல்வாக்குமிக்க ஏடுகள் இங்குள்ள நிலேபற்றி உலகின் கவனத்தைக் கவரும் வண்ணம் எழுதியுள்ளன.

இங்கு இனக்கலவரம் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்திலேயே நிலேமையை ஐ. நா. வின் கவனத்துக்கு கொண்டுவருவதற்காக பிரிட்டனிலிருந்து ஒரு தூதுக் குழுவை பிரிட்டனிலியங்கி வரும் ஈழத்தமிழர் விடுதலே

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ் துப்பாக்கிச் சூடு; பொலிசார் செய்த படுகொலே!

16-8-77ல் யாழ்ப்பாணத்தில் பொலிசார் மேற் கொண்ட துப்பாக்கிச் சூட்டின்போது பலியான ஆனந்த வேல், பாலசிங்கம் பாக்கியராஜா ஆகியோரின் மரணம் சம் பந்தமாக விசாரணே நடத்திவந்த நீதவான் திரு. கே. வி. நவரத்தினம் 19-9-77-ல் இதுபற்றிய தமது தீர்ப்புரையை வழங்கினுர். பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டில் மரணமான குறித்த நபர்கள் இருவரும் படு கொலே செய்யப்பட்டிருப்பதாக நீதவான் தமது தீர்ப் பில் தெரிவித்துள்ளார்.

அவர் தன் தீர்ப்பில் மேலும் தெரிவித்ததாவது:-

''பொருட்களுக்கு எதிராக விளேவிக்கப்பட்ட குற்றங்களே ஆராயுமிடத்து வளர்ந்துவரும் ஒழுங்கீனம் மூலம் நியாயம், நீதி, கௌரவம் ஆகியன நிலே இறங்கி வருவதை உணர்கி றேன். நியாயத்தை ஆராய் கின்ற மனித குணம் எத்தனே கொடூரமான காடுகளே நோக்கி நகர்ந்துகெண்டிருக் கின்றது! இன்று அவசரம் காரணமாக உண்மைகள் பலி யிடப்படுகின்றன, குற்றம் புரிவது இன்று ஒழுக்கமாகி விட்டது. குற்றங்களேத் தடுக்கவேண்டிய அமைப்பு இன்று பரிகாசத்துக்கு இலக் காகிக்கொண்டிருக்கிறது. மனிதர்கள் மீண்டும் தூயவாழ்வு வாழவேண்டுமானுல், மனிதர் களிடையே நல்ல குணங்களே மீள விதைக்கும் பணியை மத ஸ்தாபனங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று மன் ருட்டமாகக் கேட்கின்றேன்.

''தர்மம் என்பது ஒரு தொப்பி. அதை அணியக் கூடாதவர்கள் அணிந்திருக்கும் காரணத்தால் அதன் உருவம் சிதைந்துவிட்டது''

## தமிழ் அகதிகட்கு வெளி நாடுகள் உதவி!

அண்மையில் நடைபெற்ற சிங்கள இன வெறியினுல் பாதிக்கப்பட்டு அகதிகளாகி யுள்ள தமிழர்களுக்கு உதவி புரிய வெளிநாடுகள் பல முன் வந்துள்ளன. பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு உதவித் தொகை யாக மேற்கு ஜெர்மனி ஒரு இலட்சம் மார்குகளே இலங் கைப் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனுவிடம் அளித் துள்ளது. இதேபோல நோர்வே நாட்டின் குழந்தை நிறுவனமும் 25,000 டாலர் களே வழங்கியுள்ளது. புனர் வாழ்வுத் திட்டத்துக்குப் பொறுப்பேற்றுள்ள அமைச்சர் பிரேமதாசாவிடம் பிரதமர் இத்தொகையை ஒப்படைத் துள்ளார்.

இன்னும் பல வெளிநாடுகள் தமிழ் அகதிகள் மறுவாழ் வுக்கு தங்கள் உதவிகளே வழங்கவிருக்கின்றன.

## நீதவாஞக பணியாற்றியவரையே அடித்து விரட்டினர்

பதில் நீதவானுகப் பணியாற்றிய தமிழர் ஒரு வரைக்கூட மிலேச்சத்தனமாக அடித்து உதைத்து அவர் 20 ஆண்டுகளாகக் குடியிருந்த அறையிலிருந்து அவரைத் தூக்கியெறிந்து வெறியாட்டம் ஆடியிருக்கின் றனர் சிங்கள இராணுவத்தினர். இச்சம்பவம் வவுனி யாவில் 13-9-77ல் இடம்பெற்றது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:-

13-9-77ல் ஒரு புதிய இராணுவக் குழு வவுனியாவுக்கு வந்து வவுனியா வாடிவீடு, பொதுசன நூல்நிலேயம் ஆகிய வற்றில் குடிபுகுந்தது. மாத கலேச்சேர்ந்த சிரேட்ட சட்டத் தரணியான திரு. றெஜினுல்ட் அவர்கள் வவுனியா வாடி வீட் டில் ஓர் அறையில் 20 ஆண்டு காலமாக குடியிருந்து வருகி ருர். இவர் உள்ளூர் நீதிமன்றத் தில் தனது சட்டத்தொழிலே நடத்தி வருபவர்; அத்துடன் மாஜிஸ்ரேட் விடுமுறையில் போகும் நாட்களில், அவருக் குப் பதிலாக கடமையாற்றியு மிருக்கிருர்.

திரு. றெஜினுல்டை அவரது அறையைவிட்டு வெளியேறு மாறு இராணுவத்தினர் கட் டளேயிட்டிருக்கிருர்கள். அதற்கு றெஜினுல்ட் ஆட்சே பம் தெரிவித்திருக்கிருர். உட னடியாக அவரை வாயில் வந்தபடி ஏசி மோசமாகத் தாக்கிவிட்டு, அறையிலிருந்து தூக்கியெறிந்திருக்கின்றனர். இதனுல் அவருக்கு காயமும் ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்களேப் பொறுத்த வரையில் — சிங்கள இராணு வத்தினர் சட்டதிட்டங்களேக் கூட மதிக்காமல் இனவெறி யுடனேயே நடந்துகொள்கின் றனர் என்பதை சட்டத்தரணி றெஜினுல்டுக்கு நேர்ந்த கதி எடுத்துக் காட்டுகிறது.

## 'சன்' இதழின் ஓட்டைக் கண்

''பொத்துவில் தொகுதியில் ஐ. தே. க. வேட்பாளர் முதலாவது பிரதிநிதியாக வெற்றிபெற்றது கிழக்கில் ஐ. தே. க. கொள்கைகள் பலமடைந்துள்ளது என்பதை ஊர்ஜிதப் படுத்துகிறது—

''பொத்துவில் தொகுதியில் இரண்டாவது பிரதிநிதியாக தமிழர் விடுதலேக் கூட்டணி உறுப்பினர் வெற்றிபெற்றுள்ளதை கூட்டணியின் கொள்கைக்கோ — அல்லது தமிழ் ஈழத்துக்கு ஆதரவானதென்றோ கருத வேண்டியதில்லே!''

—'சன்' (ஆசிரிய தலேயங்கம் 16-9-77)

## தமிழ் அகதிகளுக்கு உதவ சிங்கள தொழிலாளர் மறுப்பு!

சிங்கள — தமிழ் மக்களிடையே 'தேசிய' ஒற்றுமை, சமாதானம், சகோதரத்துவம் நிலவவேண்டுமென்று பிரதம ரும் ஏனைய அமைச்சர்களும் நாள்தோறும் ஊருக்கு உப தேசம் செய்கிருர்கள் — தமிழினத்தை அடித்து வீழ்த்திய பின்னர், பௌத்த பிக்குகளும் இப்போது தமிழர்களுக்காகக் குடம் குடமாக முதலேக் கண்ணீர் வடிக்கிருர்கள் — பத்திரிகைகள் 'தேசிய ஒற்றுமை' பற்றி நாள்தோறும் வரிந்து தள்ளுகின்றன; 'நானும் நீயும் ஒன்று - உன் வாயிலே மண்ணு' என்று ''ஒற்றுமை நாடகம்'' பலமாக நடிக்கப்படும் இக்கால கட்டத்தில்— சிங்களத் தொழிலாளர்களின் அடிமனதில் வேரோடிக் கிடக்கின்ற பச்சை தமிழின விரோதத்தை, வெறியை உள்ளங்கை நெல்லிக்

(4ம் பக்கம் பார்க்க)

தமிழ் ஈழத்தேசத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழன் துயர்துடைக்க எழுந்தது தமிழக மாணவசேனை!

## கொட்டும் மழையில் நடந்த ஊர்வலம், ஆர்ப்பாட்டம்

ஈழத்தமிழர்கள் சிங்கள மிருக வெறியர்களால் படுகொலை செய்யப்படுவதை அறிந்ததும் தமிழ்நாடுபொங்கியெழுந்தது. —தமிழகத்து அனைத்து அரசியல் கட்சிகளும் ஈழத் தமிழர் களுக்காக ஆர்த்தெழுந்தன. தமிழ் நாடு மாணவர்களும், இளைஞர்களும் தோள்தட்டியெழுந்தனர் — ஈழத் தமிழர் களுக்காக எழுச்சிக் குரல் கொடுத்தனர். எங்கிருந்தாலும் இனத்தாலும் மொழியாலும் நாம் தமிழர் — உலகில் ஒரு தமிழனுக்கு இன்னல் நேரிடினும் தமிழகம் பொறுக்காது என்பதை தமிழ்நாடு மாணவ சமுதாயம்எடுத்துக்காட்டியது.

தமிழக மாணவர்களின் ஆர்ப்பாட்டங்களுக்கும் உணர்ச்சிக்கும் உந்து சக்தியாக விளங்கியவர் — விளங்குபவர் — தமிழக சட்டமன்ற உறுப்பினரும் தமிழக மாணவ சமுதாயத்தின் வழிகாட்டியாக திகழும் செஞ்சி ந. இராமச்சந்திரன் பீ. ஏ. பி. எல். அவர்களாகும். ஈழத் தமிழர்களின் உணர்வுகளையும் போராட்ட வரலாறுகளையும், கோரிக்கைகளையும், ஈழத் தமிழ் இளைஞர்களின் சுதந்திர வெறியையும் புரிந்துகொண்டு வீறுகொண்ட தமிழ்ச் சிங்கமாக தமிழினத்தின் விடுதலைக்காக குரல் கொடுப்பதில் முன்னணியில் நிற்கும் செஞ்சி ந. இராமச்சந்திரன் எம். எல் ஏ. அவர்களும் அதே போன்ற உணர்வுடைய தி. மு. க. தொழிற்சங்க பிரமுகர் திரு. சுப்பு அவர்களும் உலகத்தமிழ்இனப் பாதுகாப்பு பேரவையின் அமைப்பாளராக விளங்கும் தமிழ் மன்னன் அவர்களும் இணைந்து கொடுத்த குரல் தமிழக மாணவர்களின் இரத்தத்தில் சூடேற்றி அவர்களை வீறு கொண்டெழுந்து ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுத்திட வைத்தது.

திரு. இராமச்சத்திரனுடன் தங்கியிருந்த தமிழ் இளைஞர் பேரவை பிரமுகரும் சிறை மீண்ட இளைஞருமான பொன். சத்தியசீலனும் தமிழக மாணவர்களையும் தமிழக அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துப்பேசி, ஈழத்தமிழர் அவல நிலையை விளக்கினர்— இவற்றின் பெறுபேருகத்தான் தமிழகத்து மாணவசமுதாயம் ஈழத் தமிழர்களின் இழிநிலையறிந்து—அவர்கள் கொன்றொழிக்கப்படுவதறிந்து — பொங்கியெழுந்தனர். வேலைநிறுத்தம், ஆர்ப்பாட்டம் நடத்தி ஈழத் தமிழர்கள் யாருமற்ற அனுதைகள் அல்ல என்பதை நிலை நாட்டினுர்கள்.

சென்னை சட்டக்கல்லூரி மாணவர்கள் 2000 பேர் 25-8-77 ல் சென்னை மாநகரத்தில் மாபெரும் கண்டன ஊர்வலத்தை நடத்தி, ஊர்வலத்தின் முடிவில் தங்கள் உணர்வுகளை எழுத்தில் வடித்து இலங்கை தூதரிடம் கையளித்தனர்.

சென்னை பச்சையப்பன் மாலைக்கல்லூரி மாணவர்கள் 24-8-77 ல் மாணவர் தலைவர் ராஜசேகர் தலைமையில் இலங்கையில் தமிழர் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியதுடன், அத்தீர்மானத்தை எடுத்துக் கொண்டு கொட்டும் மழையில் ஊர்வலமாக இலங்கை தூதரகம் நோக்கி சென்றனர். 'கொட்டும் மழையிலும் கொடுமையை எதிர்ப்போம்' என்று அவர்கள் கோஷமெழுப்பினர். இலங்கைத் துணைத்தூதர் பயந்து போய் அவர்களைப் பார்க்க மறுத்து விட்டாரம். பின்னர் பொலீசார் அழைக்கப்பட்ட பின்பே — இரு மாணவர்கள் மட்டும் இலங்கைத் துணைத் தூதரைப் பார்க்க அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் தமது கண்டன தீர்மானத்தை இலங்கைத் துணைத்தூதரிடம் கையளித்தனர்.

சென்னை எஸ். ஐ. வி இ. டி. கல்லூரிமாணவ மாணவியரும், ஈழத்தமிழர் கொடுமைக்குள்ளாக்கப்படுவதைக் கண்டித்து ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். கல்லூரி முன்னே அவர்கள் கூடி சிங்களவர்களின் வெறிச் செயலைக்கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியதுடன்— சிங்களவர்களால் படுகொலை செய்யப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு இரண்டுநிமிடம் மௌன அஞ்சலியும் செலுத்தினர்.

இவைதவிர—தி. மு. கழகத்தின் வேண்டுகோளுக்கமைய சென்னையில் மட்டுமன்றி தமிழ்நாட்டின் ஏனைய மாவட்டங்களிலும் ஈழத்தமிழர் படுகொலையை எதிர்த்து கண்டன ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள் இடம்பெற்றன, கோவை நகர், உதகமண்டலம், கடலூர் மதுரை, நெல்லை, வேலூர் ஆகிய இடங்களில் அவ்வப்பகுதி தி. மு. க. பிரமுகர்களும், ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகளும், கட்சிசார்பின்றி ஹர்த்தால், கடையடைப்பு, கண்டன ஊர்வலம் நடத்தி, கண்டனத்தீர்மானங்களையும் இலங்கைத்தூதருக்கு அனுப்பி வைத்தனர்.

சென்னை 56 வது வட்டாரத்தில் 24-8-77 ல் நடைபெற்ற இலங்கைத் தமிழர் படுகொலை எதிர்ப்புநாள் கூட்டத்தில் பேசிய தி. மு. க. பொதுச் செயலாளர் பேராசிரியர் க. அன்பழகன், ஈழத்தமிழர் பிரச்சினையை ஐ. நா. சபையில் எடுத்துச் சொல்லி தீர்வு காண்பதற்கு இந்திய அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

## தமிழ் நாட்டிலிருந்து ஓர் உணர்ச்சிக் குரல்

'' கெஞ்சுவதில்லை பிறர்பால் அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை மொழியையும் நாட்டையும் ஆளாமேல்
துஞ்சுவதில்லை எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே ''

– தென்மொழி பெருஞ்சித்திரன்

### ஓ ! ஈழத்தமிழ் அரிமாக்களே !

வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோளெங்கள் வெற்றித் தோள்கள் என்ற பெருமைக் குரியவனே! ஈழத்தை பொன்மயமாக்கி வளங்கொழிக்கச் செய்த உன் ஈகத்திற்கு கிடைத்த பலன் அடியும், சித்திரவதையும் உயிர் பலிகளும் தானு !

### ஓ ! என் அன்பு உடன் பிறப்புகளே !

இலங்கையில் உங்கட்கெதிராக நடத்தப்படும் சிங்களவர் கொடுமை கண்டு — தமிழ்ப் பெண்களின் மானம் பறிக்கப்படும் பாதுகாப்பற்ற நிலையைக் கண்டு-தமிழர் சொத்து கொள்ளையடிக்கப்படும் அநீதி கண்டு கொதித்தெழுந்து விட்டோம் மானமுள்ள உலகத்தமிழர் !
இதோ ! உன் கண்ணீரைத் துடைப்பதற்கு ஆயிரமாயிரங் கரங்கள் அலைகடலைக் கடந்து ஆர்ப்பரித்து வருகின்றன !
'' தூங்கிய புலியை இடறியதால்-தினவெடுக்கும் தோள்களொடு பொங்கி எழுந்து விட்டான் தமிழன் ''

### ஓ ! சிங்களர்களே !

ஆதியிலே தமிழ் இராவணன் ஆண்டநாடு இலங்கை
என்பதை மறந்துவிட்டாயா! தமிழர்க்கு உரிமையுடையநாடு
இலங்கை என்பதை மறுக்கமுடியுமா !
இலங்கை மண்ணோடு மண்ணாகக் கலந்துவிட்ட
தமிழர்க் கெதிராக நடத்தும் கொடுமைகளை
இன்றே நிறுத்து !
சமஉரிமை - சமதர்மம் பேணப்படவில்லை யென்ருல்
தமிழரின் வாய்பேசாது - கரங்கள் பேசும் !!
தமிழர் நாம் ஒன்ருவோம்-பகையை வெல்வோம் !!

தகடூர் தங்கராசு
செயலர்,
பாவலர் கழகம்,
தருமபுரி-4

பாவலர் கருமலைத்தமிழாழன்
மாவட்டப் பொறுப்பாளர்,
தமிழ்நாடு எழுத்தாளர் முன்னேற்றக் கழகம்,
தருமபுரி-2 தமிழ்நாடு

## பிளவுபட்ட இலங்கைக்கு அத்திவாரமிட்டவர்கள் சிங்கள இனவெறியர்களே !

வேண்டுமென்று திட்டமிட்ட முறையில் பல்லாயிரக் கணக்கான தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற வன்முறைக் கொடுமைக்கு தமிழர் கூட்டணியையும் அதன் தனிநாடு கோரிக்கையையும்,கூட்டணித் தலைவர்களின் உணர்ச்சியூட்டும் பேச்சுக்களையும் காரணம் காட்டுவது எவ்வகையிலும் சமாதானமாக மாட்டாது. தாங்கள் அடைந்த விரக்தியின் காரணமாக ' தமிழ் ஈழம் ' கோரவேண்டிய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளார்களென்ருல்—1956, 1957, 1958, 1977 ஆகிய ஆண்டுகளில் தாம் தமிழர்களுக்கு விரோதமாக மேற்கொண்ட வன்முறைகளால்—சிங்கள இன வெறியர்கள் பிளவுபட்ட ஓர் இலங்கைக்கு அத்திவாரம் இட்டுள்ளார்கள். நடந்து முடிந்த சேதங்களை ஈடு செய்வதாக இருந்தால் — அதற்கு மிகப் பெரும் அரசியல் சாதுரியமும், மனிதாபிமானமும் வேண்டும்.

பௌத்த பிக்குகளும், பௌத்த அமைப்புக்களும் இத் துறையில் ஆர்வம் காட்டத் தொடங்கினுலும் — இரத்தத்தை உறைய வைக்கும் பேச்சுக்களாலும் அறிக்கைகளாலும், தமிழர்களை முழந்தாளிடச் செய்து விடலாம் என்று கருதுகிற சில பௌத்த குரு [illegible] வல் திணைக்களத்தின் ஆசியைப் பெற்றுக் கொண்டதாகக் கருதப்படும் ஒரு பௌத்த பிக்கு—யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாக சிங்கள இராணுவத்தை நிலை நிறுத்த வேண்டுமென்றும் தமிழர்களின் மரபு வழித்தாயகத்தைச் சேர்ந்த பிரதேசங்களில் சிங்களவர்களைக் குடியேற்ற வேண்டுமென்றும் கோரியிருக்கிருர். இந்தமாதிரியான கொள்கைகள் தாம் இன்றைய நிலைக்குக் காரணமாக உள்ளன.

சிங்கள பிரதேசங்களில் அரசாங்க உதவியுடன் தமிழர்களையும் அரசு திட்டமிட்டு குடியேற்றுமானுல் அது வேறு விடயம்; அல்லது நவீன உலகில் இத்தகைய கொள்கைகளின் மூலம் இன ஐக்கியத்தை ஏற்படுத்தி விடவும் முடியாது. இத்தகைய எண்ணிப் பார்க்க முடியாத கொள்கைகள் முடிவில் தற்கொலைக் கொப்பாக முடிந்துள்ளதை சரித்திரம் எடுத்துக் காட்டுகிறது.

பிரதமருக்கு இந்த நாட்டின் ஒற்றுமையைக் கட்டிக் காத்திட வேண்டிய பொறுப்பு உண்டு; இந்தப் பொறுப்பை, தமிழர் கூட்டணியையும், தமிழர்களையும் வைவதால் மட்டும் ஏற்படுத்தி விடமுடியாது. சிங்களவர்களுக்கு எதிராக தமிழர்கள் மத்தியில் வெறுப்பை வளர்க்கக்கூடிய இனவெறியைக் கக்கி, சிங்கள மக்களை தமிழ் மக்களுக்கு எதிராக தூண்டக் கூடிய விஷக் கருத்துக்கள் தமது கட்சியினர் மத்தியில் தலையெடுக்காமலும் பார்த்துக் கொள்ள வேண்டியது பிரதமரது பொறுப்பாகும்.

யூ. என். பியைச் சேர்ந்த பின்வரிசை உறுப்பினர் மெரில் காரியவாசம் தேசிய பேரவையில் பேசிய கருத்து இனவாதப் போர் முழக்கமாகும். இதை யூ. என். பி. ஏற்றுக் கொள்ளவும் முடியாது— ஒதுக்கித் தள்ளவும் முடியாது. காரியவாசம் துட்டகைமுனு பற்றி பேசியதுடன், ஒவ்வொரு சிங்கள இளைஞன் இதயத்திலும்துட்டகைமுனு வாழுவதாக கூறியிருக்கிருர். இத்தகைய எதிர்ப் பேச்சுக்கள் நிலைமையை மேலும் சிக்கலாக்கவே உதவும்!''

— டிறிபியூன் (ஆசிரியத் தலையங்கம்—3-9-77)


### யாழ்நகர் சுதந்திரன் விற்பனை

மறு அறிவித்தல் வரை சுதந்திரன் பிரதிகளை சனி, புதன், ஆகிய நாட்களில் கீழ்க்குறிப்பிடும் முகவரியில் பெற்றுக் கொள்ளும்படி நகர சுதந்திரன் விற்பனையாளர்களை வேண்டுகிருேம்.

ராஜன் புக் சென்றர்,
57 ஏ, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் இருந்த கவிஞர் கொள்ளி வைத்தாராம்!

## மட்டுநகரில் பொலிசாரின் காடைத்தனம்!

வடக்குக் கிழக்கில் வாழும் தமிழர்களில் பிரதேச உணர்வுகளைத் தூண்டி தமிழர்களின் ஒற்றுமையைத் துண்டு போடுவதற்கு இனவிரோதிகள் எவ்வளவு தான் முயற்சித்தாலும், தமிழன் எங்கு வாழ்ந்தாலும் தமிழன் தான். சிங்களவன் கண்களுக்கு அவன் ஒரே தகுதியில் உள்ள பகைவன் தான் என்பதை நினைவுறுத்துவது போல - கடந்த காலங்களில் நடந்த சம்பவங்களில் தமிழன் பிரதேச வேற்றுமையில்லாது அடித்து நொறுக்கப்பட்டிருக்கின்றான்.

இதற்குச் சான்றாக யாழ்ப்பாணத்தில் தமிழன் அடிக்கப்பட்ட அதே வேளையில் இனவெறிக் கூட்டம் மட்டக்களப்பிலும் தனது வெறியாட்டத்தை நடத்தி முடித்திருக்கின்றது.

21-8-77 ஞாயிற்றுக்கிழமை மட்டுநகர் கோட்டைமுனையில் வீடொன்றில் வாடகைக்கு இருக்கும் சிங்களக் குடும்பத்தின் கவலையீனத்தால் அவ்வீட்டின் கூரையின் ஒரு பகுதி தீப்பிடித்து எரிந்தது. அதனைத் தொடர்ந்து அந்தக் குடும்பத்தின் தலைவி தமிழர்களே தாமிருந்த வீட்டிற்குத் தீ வைத்தனர் என்ற பொலீசில் செய்த துவேஷத்தனமான பொய்யான முறைப்பாட்டின்பேரில், பொலீஸ் நிலைய விடுதியில் இருந்த சிங்களப் பொலீசார் உடனடியாக அந்த இடத்திற்கு விரைந்ததுடன் — அவ்வீட்டிற்கு முன்னால் இருந்த கடையுட்பட வீதியால் சென்ற அப்பாவித் தமிழர்களையும் மிருகத்தனமாகத் தாக்கினர். மேற்படி நிகழ்ச்சியில் இருந்து தமிழனை அழிப்பதில், அவனை இம்சைப் படுத்துவதில் சிங்களக் காடையர்கள் மட்டுமல்ல, சாதாரண சிங்களப் பெண்மணிகள் கூட முன்னணி வகிக்கின்றனர் என்பதே தெளிவாகத் தெரிகின்றது. ஒரு சிங்களப் பெண்மணியின் பொய் முறைப்பாட்டுக்காக — நீலிக் கண்ணீருக்காக எத்தனை தமிழ், முஸ்லீம் மக்கள் பழி வாங்கப்பட்டுள்ளார்கள். தமிழ் பேசுகின்றவன் என்ற காரணத்தால் முஸ்லீம்கள் கூட சிங்களவர்களிடமிருந்து தப்பிவிட முடியவில்லை.

23-8-77 செவ்வாய்க்கிழமை மட்டுநகர் வைத்தியசாலையில் நடைபெற்ற ஒரு சிறு சம்பவத்தின் எதிரொலியாக பிற்பகல் 4-45 மணியளவில் பொலீசார் வீதியில் இறங்கி பொது மக்கள் மீது தம் காடைத்தனத்தைக் கட்டவிழ்த்துவிட்டனர். பொலீஸ் நிலையத்துக்கு முன்னால் சென்ற பொது மக்களின் துவிச்சக்கர வண்டியில் சென்றவர்கள் குண்டாந்தடிகளாலும், துப்பாக்கிப்பிடிகளாலும் இரக்கமற்ற முறையில் அடித்து நொறுக்கப்பட்டார்கள். அவர்கள் துவிச்சக்கர வண்டிகள் கோட்டை முனைப் பாலத்துள் பலாத்காரமாகத் தூக்கியெறியப்பட்டன. மட்டுநகர் சுதந்திரன் முகவரான குமரன் ஸ்டோர்ஸ் தாபனம் உட்பட பல கடைகள் அடித்து நொறுக்கப்பட்டன. வீதியில் போன வேறு பல துவிச்சக்கர வண்டிகளும் இரண்டு மோட்டார் வாகனங்களும் தாக்குதலுக்குள்ளாகின.

அதே இரவு மட்டுநகர் வாவியில் கட்டப்பட்டிருந்த பல தோணிகள் நொறுக்கப்பட்டதன் காரணத்தால் அதை நம்பியிருந்த பல மீனவர்களின் வயிற்றிலடித்தனர் — அதற்கு அடுத்த நாளும் பொதுமக்கள் பலர் தாக்குதலுக்குள்ளாகினர்.

முகத்துவாரத்தில் உள்ள ஒரு வாடிக்கு தீ வைக்கப்பட்டது. இந்தக் கைங்கரியத்தைச் செய்தவர்கள் பொலீசார் தான் என நம்பப்படுகின்றது. ஆனால் இந்தக் கொடுமையைச் செய்தவர் உணர்ச்சிக் கவிஞர் காசிஆனந்தன் தான் என்று அவர்மீது பழியைப் போட்டு கவிஞரைத் தேடிக்கொண்டு பொலீசார் அவர் வீட்டிற்குச் சென்றனர். நல்ல வேளையாக கவிஞர் கடந்த ஒரு வாரமாகவே கொழும்பில் இருந்தபடியால் அந்தப் பழியில் இருந்து தப்பினார். ஆனால் சென்றவர்கள் அவர் வீட்டில் இருந்தவர்களையும் உறவினர்களையும் பயமுறுத்திவிட்டுச் சென்றனர்.

திடீர் திடீரென அப்பாவி இளைஞர்களின் வீடுகள் பலத்த சோதனைகளுக்குள்ளாகின. கைக்குண்டுகள், ஆயுதங்கள் அவர்கள் வீடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன என்ற சந்தேகமாம். அவ்விடங்களில் எதுவுமே இல்லாத காரணத்தால் இளைஞர்கள் சிலரும் அடித்து உதைத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

எங்கேயோ ஒரு சிங்களவன் தமிழர்களால் தாக்கப்பட்டானும் என்ற பொய் வதந்தியைப் பரப்பி கல்லடித்தெரு, சிங்களவாடி போன்ற தமிழர்கள் வசிக்கும் பகுதிகளில் தமிழ் இளைஞர்கள் காரணமில்லாது தாக்கப்பட்டனர்.

இத்தனை கொடுமைகளும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் காவல்பட்டாளம் காடைப் பட்டாளமாக மாறி நடத்திய கெடுபிடிகளுமாகும்.

கிழக்கிற்குக் கிடைத்த பெருமகனே, தமிழரில் ஒரே ஒருவராக தெரிவு செய்யப்பட்டுள்ள நீதிதேவ நாயகமே எங்கே உங்கள் நீதி. உங்களைத் தெரிவுசெய்த கிழக்கில் இத்தனை கொடுமைமளும் நடந்தபோது நீர் எங்கே போனீர்? இத்தனை கொடுமைகளும் நடந்த பின்னரும் தமிழர்கள் கொலை செய்யப்பட்ட பின்னரும், கொள்ளையடிக்கப்பட்ட பின்னரும், கன்னியர் கற்பு களங்கப்படுத்தப்பட்டபின்னரும் இதுவெல்லாம் காலத்துக்குக் காலம் நடக்கும் சாதாரண விடயம் என்பதுபோன்று சமாதானம் கூறுமளவிற்கு உங்கள் நீதிபரிபாலனம் திகழ்கின்றதே.

பொறுமை பொய்த்ததில்லை, நீதியின்மை நிலைத்ததில்லை, கட்டாயம் காலம் உணர்த்தத் தவறிவிடாது.

—நாவண்ணன்—
(தகவல்: சகுந்தலன்)

---

# தாயகம் திரும்பிய தமிழ் வர்த்தகர்களுக்கு ஓர் ஆலோசனை!

சிங்கள மக்கள் மத்தியில் தமிழன் மீது அடங்காத துவேஷம் மூண்டுவிட்டது. 1958-ம் ஆண்டு கலவரத்திலே தமிழினம் மீது காட்டிய துவேஷம் 1977-ம் ஆண்டிலே பல நூறுமடங்கு அதிகரித்துவிட்டது. தன்னை துட்டகைமுனு வம்சாவளிகள் எனக்கூறும்சிங்களஇனம் எல்லாளன் வம்சத்தை பந்தாடலாம் என நினைக்கிறது. துட்டகைமுனு — எல்லாளனுக்கிடையே நடந்த போரிலே எல்லாளனின் யானை களைத்திருக்கும் போது, அக்கால போர் முறையிலே தவறான முறையில், எல்லாளனை கொன்றான் துட்டகைமுனு. ஒநாயின் புத்தி ஒநாய்க்குத் தான். துட்டகைமுனு வென்ற வழியிலே துட்டகைமுனு வம்சாவளிகள், தம்கையே பலம் கொண்டது என நினைக்கிறார்கள். அவர்கள் தலைகுனியும் காலம் நெருங்கி விட்டது.

''குட்ட குட்ட குட்டுப்படுபவனும் முட்டாள், குட்ட குட்ட குனிபவனும் முட்டாள்.'' இதன் எதிரொலியே எமது நாட்டில் ஏற்பட்டது. ஆனால் இது இனக்கலவரமல்ல, பொலீஸாரின் அட்டூழியம் தாங்காது குட்டுப்பட்ட எம்மினம் குட்டியவர்களுக்கு பதிலடி கொடுத்தார்கள். இதைச் சாதகமாக வைத்துக்கொண்டு பொலீஸாரின் அட்டூழியம் தழைத்தோங்கியது.

அதே நேரத்தில் யாழ் சிங்கள வாசிகள் எவ்வித இடையூறும் ஏற்படாது அவரவர் ஊர்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டார்கள். ஆனால் அவர்கள் தமிழனுக்கு திரும்பச் செலுத்திய நன்றிக்கடன்; விகாரை நொறுக்கப்பட்டது, சிங்களப் பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள், பிக்குமார் துன்புறுத்தப்பட்டார்கள்...... என பல வதந்திகளை பரப்பிவிட்டார்கள்.

இதன் எதிரொலியாக நாட்டின் பல்வேறு பாகங்களில் வசிக்கும் தமிழ் மக்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன, கடைகள் எரிக்கப்பட்டன, பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள், குழந்தைகள் துன்புறுத்தப்பட்டார்கள், அரசாங்க உத்தியோகத்தகர்கள் தமக்குக் கீழ் வேலைசெய்யும் ஊழியர்களாலேயே அடித்துத் துன்புறுத்தப்பட்டார்கள், பலர் கொலை செய்யப்பட்டார்கள்.

இதன் பயனாக எம்மினம் அகதிகளாக கருதப்பட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். இவர்களில் ஆயிரக்கணக்கானோர் வடக்கு, கிழக்கு மாகாணங்களுடன் எவ்வித தொடர்பும் அற்றோர்.

இவர்கள் வாழ்வுக்கு இனி வழி ?, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உத்தியோகம் வழங்கி அவர்கள் குடியிருக்க வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் காணிகள் வழங்கப்பட வேண்டும். அவர்களின் புனர்வாழ்வுக்கு வழி செய்ய வேண்டும். ஆனால் கடைகள் எரிக்கப்பட்டு, உடைக்கப்பட்டு, சூறையாடப்பட்ட தனியார் வர்த்தகர் என்ன செய்யலாம் ?

எமது போராட்டத்துக்கு தனியார் வர்த்தகர்கள் பெரிதும் உதவி புரியலாம். இவ்வர்த்தகர்கள் கொள்வனவு செய்து விற்பனவு செய்யும் பொருட்கள் அதிகமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விளையும் வெங்காயம், மிளகாய், புகையிலை, நெல் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களாகும். ஆனால் வர்த்தகர்கள் இப்பொருட்களை விற்பனவு செய்ய, சிங்கள நகரங்களிலேயே தமது விற்பனை ஸ்தாபனத்தை நிறுவியுள்ளனர். அரிசி ஆலைகள் கூட சிங்கள நகரத்திலேயே நிறுவப்பட்டுள்ளன.

அண்மையில் ஏற்பட்ட கலவரங்களினால் இவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். ஆனால் கவலைக்குரிய விடயம் என்னவென்றால்! குட்டுப்பட்ட பிறகும், திரும்பவும் குட்டுப்படுவதற்காக இவர்கள் சிங்கள நகரங்களுக்கு மீண்டும் படை எடுக்கிறார்கள். இவர்களின் நினைவு, கனவு எல்லாம் சிங்கள மக்களிடம் தான் தம் வாழ்க்கை அடங்கிக்கிடக்கிறதென்று. ஆனால் அத்தியாவசிய உணவுப் பொருட்களை பொறுத்தவரையில் எம்மிடம் தான் சிங்கள மக்களின் வயிற்றுக்குத் தேவையே அடங்கிக்கிடக்கிறது. எம்மினத்தின் கீழ் தான் அதிகமாக சிங்கள மக்கள் தொழில் புரிகிறார்கள். டாக்டர், தொழில் நுட்ப வல்லுனர், பாங்க் உத்தியோகத்தர், ஆசிரியர், பேராசிரியர்கள், எல்லாம் அதிகமாக தமிழர்களாகத்தான் உள்ளார்கள். இப்படியிருக்கும் போது வர்த்தகர்கள் மாத்திரம் ஏன் தம் தொழிற் ஸ்தாபனங்களை சிங்கள நகரங்களில் நிறுவ வேண்டும் ? எமது நகரங்களில் வர்த்தக ஸ்தாபனங்களை நிறுவினால் வர்த்தகம் நடைபெறாதா ?

வர்த்தகர்கள் தங்கள் வர்த்தக ஸ்தாபனங்களை வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற நகரங்களில் நிறுவுவார்களேயானால் வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற நகரங்கள் ஒரு மத்திய சந்தையாக மாறிவிடும். அரிசி ஆலைகள் இங்கு நிறுவப்பட்டால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விளையும் நெல் இங்கேயே குற்றப்படும்.

சிங்கள வர்த்தகர்கள் தங்களுக்கு பொருட்களை கொள்வனவு செய்ய இந்நகரங்களுக்கு வருவார்கள்......... கட்டாயம் வந்தே ஆகவேண்டும். நெல், வெங்காயம், மிளகாய், புகை

(4ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது.

# வேலைக்குச் செல்வதில்லையென தமிழ் அரச ஊழியர் முடிவு!

சிங்கள இனவெறிக் கொடுமையால் பாதிக்கப்பட்டு தாயகம் திரும்பியுள்ள தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்கள், டாக்டர்கள், பொறியியலாளர்கள், வங்கி ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகிய பல்துறையைச் சேர்ந்தவர்களும், தங்கள் நிலைமையை உணர்ந்து தாம் சமர்ப்பித்துள்ள கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவி சாய்க்கும் வரை வேலைக்குத் திரும்புவதில்லையென்று தீர்க்கமாக முடிவு செய்துள்ளனர். 19-9-77 ல் வேலைக்குத் திரும்ப வேண்டுமென்ற அரசின் கோரிக்கையை அவர்கள் நிராகரித்துவிட்டனர்.

பாதிக்கப்பட்ட தமிழ் அரசாங்க ஊழியர்களின் நிலைமை குறித்து பிரதமருக்கு எதிர்க்கட்சித் தலைவரும், கூட்டணி செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் எழுதியுள்ள கடிதமொன்றில் தமிழ் ஊழியர்கள் சார்பாக பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்:-

(1) இவ் அரசாங்க ஊழியர்கள் முன்பு வேலை செய்த இடங்களுக்கு திரும்பலாமாவென முடிவு செய்ய மேலும் அவகாசம் அளிக்கவேண்டும்.

(2) அவர்கள் அவ்விடங்களுக்கு வேலைகுத் திரும்ப முடியாவிடில் வடக்கில் வேலை செய்த சிங்கள உத்தியோகத்தருக்கு மாற்றம் வழங்கப்பட்டதுபோல் இவர்களுக்கும் மாற்று இடம் அளிக்கப்படல் வேண்டும்.

(3) கொழும்பிலும், வெளியூர்களிலும் வேலை செய்த தமிழ் அரசாங்க ஊழியர்களின் உடலுக்கு ஊறு விளைவிக்கப்பட்டிருந்தால் அல்லது துன்புறுத்தலுக்குள்ளாகியிருந்தால் அது சம்பந்தமாக குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நடவடிக்கையெடுக்கவும். இவ் ஊழியர்களுக்கு மீளவும் போதிய பாதுகாப்பளிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(4) இவ்விடயங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு இடம் பெயர்ந்த அரசாங்க ஊழியர்கள் தமது முன்னைய இடங்களில் வேலை செய்யக்கூடிய நிலைமை உருவாகும் வரை அல்லது அவர்கள் இடமாற்றப்படும் புதிய பாதுகாப்பான இடங்களில் கடமைக்குத் திரும்பும் வரை வடக்கிலும், கிழக்கிலும் இருக்கக்கூடிய அவ்வலுவலக கிளைகளிலோ, அல்லது கச்சேரிகளிலோ கடமையாற்ற அனுமதிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு பூரண சம்பளம் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இவர்களில் சிலர் தமக்கோ அல்லது தமது குடும்பத்துக்கோ உடுதுணி வாங்குவதற்குக் கூட பணம் தேட வேண்டிய நிலையில் உள்ளார்கள்.

## 'சகஜநிலை'யின் இலட்சணம் இதுதான்!

நாடெங்கும் 'சகஜநிலை' ஏற்பட்டுவிட்டதென்றும் தமிழ் அரசாங்க ஊழியர்களை 19-9-77 ல் வேலைக்குத் திரும்புமாறும் அரசு அறிவித்திருந்தது. ஆனால் 'சகஜநிலை' என்று அரசால் அறிவிக்கப்பட்டுள்ள இச்சமயத்திலும் ஆங்காங்கே தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்றுள்ள சில வன்முறைச் சம்பவங்கள் வருமாறு:-

* பம்பலப்பிட்டி அகதிகள் முகாமில் இருந்த சுப்பையா என்பவரும் அவருடைய மனைவியும் 13-9-77 ல் 32/1 மீன்பிடி விடுதி, ஹேபர்ன் சைட், தெகிவளை என்ற விலாசத்திலுள்ள தமது வீட்டுக்குத் திரும்பினர். சமூகசேவைத் திணைக்களம் அளித்த ரூபா 350-00 உட்பட அவரிடமிருந்து காசு கொள்ளையடிக்கப்பட்டது. இவர்கள் கல்கிசை பொலிசாருக்கு முறைப்பாடு செய்துவிட்டு இச்சம்பவம் உண்மைதான் என்று பொலீஸ் கண்காணிப்பாளரிடம் கடிதமும் பெற்றுக்கொண்டு மீண்டும் அகதி முகாமுக்கே திரும்பிவிட்டனர்.

* 11-9-77ம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு கல்கிசையில் கே. பி. குப்புசாமி என்பவரிடம் ரூபா 660-00 கொள்ளையடிக்கப்பட்டது.

* ருகமையில் இராஜதுரை என்பவர் தாக்கப்பட்டதோடு அவரது வீட்டை 15 பேர் கொண்ட கோஷ்டி தாக்கியுள்ளது.

* தமிழ்க் குடும்பங்களுக்கும் தமிழ் வீடுகளுக்கும் பாதுகாப்பு அளிக்கிறோம் என்று கூறி பணம்பறித்த புறக்கோட்டை வெள்ளவத்தை ஆகிய இடங்களைச் சேர்ந்த இரு குழுக்களின் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

மேற்கண்ட சம்பவங்களை எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பிரதமருக்கு கடைசியாக எழுதியுள்ள கடிதம் ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவைதவிர — அநுராதபுரத்தில் கடமையாற்றும் கைதடியைச் சேர்ந்த ஆர். கணபதிப்பிள்ளை என்னும் தமிழர் 8-9-77 ல் தமது விடுதியைப்பார்த்துவர கலவர சம்பவங்களின் பின்னர் அனுராதபுரம் சென்றிருந்தார். அநுராதபுரம் புகையிரத நிலையத்தில், அங்கிருந்து திரும்பிவர அவர் புகையிரதத்தை எதிர்பார்த்து நின்றசமயத்தில் சிங்களக் குண்டர்கள் மத்தியில் சிக்கி, தாக்கப்படவிருந்தார். உடனடியாக அவர் அங்குநின்ற இராணுவ வீரர்களைக் கெஞ்சி மன்றுடி, புகையிரதம் நிலையத்துக்கு வரும்வரை அவர்களை நிலையத்திலே தங்கி நிற்கச் செய்ததால், தப்பித் தவறி ஊர்வந்து சேர்ந்தார். இதை அவரே யாழ் மாவட்ட இணைப்பு அதிகாரிக்கு கடிதமூலம் அறிவித்துள்ளார்.

## தமிழ் ஈழப் பிரச்சினையை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புக்கள் கூட்டாக நியூயோர்க்குக்கு அனுப்பிவைத்தன.

அமெரிக்காவில் இயங்கி வரும் ஈழத்தமிழர் கழகத்தின் பிரதிநிதிகள், அமெரிக்காவின் பிரதான பத்திரிகை ஆசிரியர்களையெல்லாம் சந்தித்து இங்குள்ள நிலைபற்றி விளக்கியதுடன், ஈழத்தமிழர்களின் நியாயமான போராட்டத்துக்கு அவற்றின் ஆதரவையும் கோரினர்.

இந்த இயக்கத்தின் பிரதிநிதிகள் அமெரிக்க ராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளுடனும், அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகளுடனும் ஈழத் தமிழர் நிலைபற்றி பேசியுள்ளனர். செனட்டர் கென்னடியையும் அவர் விரைவில் சந்தித்துப் பேசவிருக்கின்றனர்.

அக்டோபர் மாதத்தில் கூடும் ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில் எப்படியும் ஈழத் தமிழர் பிரச்சினையை கிளப்புவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக நேசநாடுகளைத் தேடிப்பிடிப்பதில் வெளிநாடுகளிலுள்ள ஈழத்தமிழர் இயக்கங்கள் துரிதமாக ஈடுபட்டுள்ளன.

இலங்கைப் பிரச்சினையை இந்திய நடுவண் அரசு ஐ. நா. சபையில் எழுப்பவேண்டும் என்று தி. மு. க. பொதுச் செயலாளர் பேராசிரியர் அன்பழகன் கோரியுள்ளார்.

## தாயகம் திரும்பிய...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

யிலை தேவைக்குக் கட்டாயம் வந்தே ஆகவேண்டும். அதே போல் எமது வர்த்தகர்கள் எமக்கு தேவையான பொருட்களை சிங்கள நகரங்களிலிருந்து கொள்வனவு செய்து எமது தேவையை ' பூர்த்தி செய்யலாம்.

வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற நகரங்கள், மத்திய சந்தை நிலையமாக மாறினல் இம்மாவட்டங்கள் தானகவே அபிவிருத்தியடைந்துவிடும். இம் மாவட்டங்கள் அபிவிருத்தியடைய பிற மாவட்டங்கள் அபிவிருத்தியடையும்.

இதை விட்டு விட்டு, இனி மேலும் சிங்கள நகரங்களில் போய் வர்த்தகம் செய்வதென்றல், அதைவிட ஒரு முட்டாள்த்தனம் வேறொன்றுமில்லை.

எமது போராட்டத்துக்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். பிரிந்திருக்கும் அரசியல் வாதிகள் உட்பட, அப்படியில்லாமல் எல்லோரும் மீண்டும்; எமக்கு இங்கு ஒரு ஒளிமயமான் வாழ்விருந்தும்; சிங்கள மக்களிடம் அடிமைகளாக வாழ சிங்கள நகரங்களுக்கு செல்வததென்றல், தமிழனுக்கு என்றுமே உய்வில்லை.

''எம்மினம் ஒத்துழைக்க... தானகவே கிடைக்கும் எமது உரிமைகள்.........இல்லையேல் ......உருவாகும் தமிழ் நாடு''.

—ராஜேஸ்வர் திருச்சோதி,
காவலூர்.

## தமிழ் அகதிகளுக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கனியாக அம்பலப்படுத்தும் செய்தியொன்று இதோ —

கண்டிப் பகுதியில் வீடுகள் எரிக்கப்பட்டு வீதிக்கு விரட்டப்பட்டிருக்கும் தமிழ் அகதிகளுக்கு மீண்டும் வீடு கட்டிக் கொடுத்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் முயற்சியில் கண்டி அரசாங்க அதிபர் திரு. ஏ. பி. தமுனுபொல ஈடுபட்டிருக்கிறர். ஆனல் தமிழ் அகதிகளுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்குத் தாம்படும் கஷ்டத்தை அவர் பகிரங்கமாக எடுத்துரைத்திருக்கிறர். என்ன கஷ்டம் தெரியுமா? அவரே கூறுகிறர்:-

''தமிழ் அகதிகளுக்கு வீடுகள் கட்டுவதற்கு, மேசன்கள், தச்சுத் தொழிலாளர்கள், மற்றும் தொழிலாளர்களை தேடிப் பிடிப்பது ஒரு பெரிய பிரச்சினையாகிவிட்டது. இந்த வேலைகளை வழமையாக சிங்களத் தொழிலாளர்கள் தாம் செய்வது வழக்கம். அவர்கள் இப்போது தமிழ் சமுதாயத்துக்கு உதவி புரிய மறுக்கின்றனர்!''

என்று உண்மையைப் பச்சையாகக் கூறியிருக்கிறர் கண்டி அரசாங்க அதிபர். இதை 'சன்' பத்திரிகை அப்படியே வெளியிட்டுள்ளது.

இந்தக் கஷ்டத்தைப் போக்குவதற்கு, சிறைக் கைதிகளைப் பயன்படுத்தப்போவதாக மேற்படி அரசாங்க அதிபர் அறிவித்திருக்கிறர். சிறைக் கைதிகளிலும், சிங்களக் கைதிகள் தமிழர்களின் வீடுகளைக் கட்டிக் கொடுத்திட மறுத்திடக்கூடும் — யார் கண்டார்கள்?

இதிலிருந்து தெரிவதுஎன்ன? சிங்கள முதலாளி வர்க்கமானலும் சரி — சிங்கள பாட்டாளி வர்க்கமானலும் சரி சிங்கள மக்களிடையே முழுமையாக தமிழினக் குரோதமும், விரோதமும் கொழுந்து விட்டெரிவது தெரிகிறதல்லவா?

## சிவபாக்கியம் கணவனை தேடுகிறர்

வலிவேரியா, பியகம வீதி இல. 421 ஐ சேர்ந்த திருமதி சிவபாக்கியம் சுந்தரம் தற்பொழுது திருக்கேதீஸ்வரம் அகதிகள் முகாமில் தனது ஒரு மகனுடன் தங்கியுள்ளார். இவரது கணவர் திரு. ரீ. எஸ். சுந்தரம் மதவாச்சியிலுள்ள தனது மைத்துணர் வீட்டிற்கு வந்தவர் தற்பொழுது எங்கிருக்கிறர் என்று தெரியவில்லை. அவரைப் பற்றி தகவல் அறிந்தவர்கள் திருக்கேதீஸ்வரம் அகதிகள் முகாமோடு தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

## சிங்கள வெறியர் கோரிக்கை!

தமிழர் தலைநகரான திருகோணமலையை 'சிங்களபுர' என பெயர்மாற்றம் செய்யும்படி சிங்கள இன வெறியர்களால் ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது. திருகோணமலையின் பிரதான இடமான அநுராதபுர சந்தியில் உள்ள பட விளம்பரப் பலகையிலும் ''திருமலையை 'சிங்களபுர'மாக மாற்று'' என சிங்களத்தால் எழுதப்பட்டுள்ளது. இதை இங்குள்ள தமிழர்கள் பார்த்து மிகவும் மனக்கொதிப்பு அடைந்துள்ளனர்.


"நீம் வாசனை சோப்"

சுத்தமான வேப்பெண்ணெய்
கலந்து தயாரிக்கப்பட்ட
நீம் வாசனை சோப்பை
வாங்கி உபயோகியுங்கள்.
உங்கள் சருமத்தின் பாதுகாப்பிற்கு சிறந்தது

—ஓர் மில்க்வைற் தயாரிப்பு


இப் பத்திரிகை, சிலோன் நியூஸ் பேர்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் 1977ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ம் திகதி புதன் கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. அச்சுப்பதிவு—வஸ்தியன் அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org